Nikon

COOLPIX

# கேமரா சாதனநிரல் புதுப்பித்தல்

*- Windows -*

ஒரு Nikon தயாரிப்பைத் தேர்ந்தெடுத்ததற்கு நன்றி. இந்த வழிகாட்டியானது சாதனநிரல் புதுப்பித்தலை எவ்வாறு செய்யவேண்டும் என்பதை விவரிக்கும். *உங்களால் இந்த புதுப்பித்தலை வெற்றிகரமாக முடிக்கமுடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லை என்றால், ஒரு Nikon சேவைப் பிரதிநிதி மூலம் புதுப்பிக்கலாம்.*

**கேமராவின் செயல்பாடுகள் தொடர்பான தகவலுக்கு கேமரா கையேட்டைப் பார்க்கவும்.**

**முக்கியம்**

புதுப்பித்தலின் போது மின்சக்தி தடைபட்டாலோ அல்லது கேமரா கட்டுப்பாடுகளை இயக்கினாலோ கேமரா சேதமடையலாம். புதுப்பித்தலின் போது கேமராவை ஆஃப் செய்வது, நீக்குவது அல்லது மின்சக்தி மூலத்திலிருந்து இணைப்பை துண்டிப்பது, அல்லது கேமரா கட்டுப்பாடுகளை இயக்க முயல்வது போன்றவற்றை மேற்கொள்ள வேண்டாம். புதுப்பித்தல் வெற்றிகரமாக முடியவில்லை மேலும் கேமரா சரியாக இயங்கவில்லை என்றால், Nikon-அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரதிநிதியிடம் கேமராவை சோதனைக்காக எடுத்துச் செல்லவும்.

## 1 தயார்படுத்தல்

கேமரா சாதனநிரலை மேம்படுத்த, உங்களுக்கு வேண்டியவை:

- கேமரா
- கார்டு ரீடர் அல்லது கார்டு துளை பொருத்தப்பட்டுள்ள ஒரு கணினி
- பின்வரும் கேமரா மின்சக்தி மூலங்களில் ஒன்று:
  - — ஒரு AC அடாப்டர்
  - — இந்த புதுப்பித்தலை முடிப்பதற்கான சார்ஜுடன் கூடிய பேட்டரி அல்லது பேட்டரிகள்
- கேமராவில் வடிவமைப்பு செய்யப்பட்ட Nikon-அங்கீகரித்த ஒரு மெமரி கார்டு (கார்டை வடிவமைப்பு செய்யும்போது மெமரி கார்டில் உள்ள அனைத்து தகல்களும் அழிக்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்; கார்டை வடிவமைப்பு செய்வதற்கு முன்பு, நீங்கள் வைத்துக்கொள்ள விரும்பு தகவலை ஒரு கணினி அல்லது மற்ற சாதனத்தில் மறுபிரதி எடுத்துக்கொள்ளவும்)
- கேமரா *பயனர்கள் கையேடு*

# 2 கேமராவின் தற்போதைய சாதனநிரல் பதிப்பைச் சோதித்தல்

உங்கள் கேமராவில் காண்பிக்கப்படும் மெனுக்கள் இங்கே காண்பிக்கப்படுபவையிலிருந்து வேறுபடலாம்.

1 கேமராவை ஆன் செய்யவும்.

2 மெனுக்களைக் காட்ட MENU ஐ அழுத்தவும்.

3 அமைப்பு மெனுவிலிருந்து **சாதனநிரல் பதிப்பு** என்பதைத் தேர்வுசெய்யவும்.




4 தற்போதைய சாதனநிரல் பதிப்பு காண்பிக்கப்படும். சாதனநிரல் பதிப்பு இந்த புதுப்பித்தலுக்கான சரியான பதிப்பு தான் என்பதை உறுதிசெய்யவும்.




"XXXX" என்பது கேமராவின் பெயர் மற்றும் "**" என்பது சாதனநிரல் பதிப்பு.

5 அமைப்பு மெனுவுக்கு வெளியேறி கேமராவை ஆஃப் செய்யவும்.

# 3 புதிய சாதனநிரலை பதிவிறக்கம் செய்து பிரித்தெடுத்தல்

1 உங்கள் கணினியில் ஒரு புதிய கோப்புறையை உருவாக்கவும்.

நீங்கள் Windows 10 அல்லது Windows 8.1-ஐ பயன்படுத்தினால், டெஸ்க்டாப் பயன்முறையில் உள்நுழைய தொடக்கத் திரையில் **டெக்ஸ்டாப்** என்று தேர்ந்தெடுக்கவும்.

2 பதிவிறக்கத் தளத்தில் இறுதி பயனர் உரிமை ஒப்பந்தத்தைப் படித்த பின்னர், **ஏற்றுக்கொள்** என்பதைத் தேர்ந்தெடுத்து, **பதிவிறக்கம்** என்பதைக் கிளிக் செய்யவும். செயல்முறை 3-1 இல் உருவாக்கிய கோப்புறையில் கோப்பைச் சேமிக்கவும்.

3 செயல்முறை 3-1 இல் உருவாக்கிய கோப்புறையை திறந்து புதிய கோப்புறையில் உள்ள துணை-கோப்புறைக்கு பதிவிறக்கம் செய்யப்பட்ட கோப்பை (“F-XXXX-V**W.exe”, இங்கு “XXXX” என்பது கேமராவின் பெயர் மேலும் “**” என்பது சாதனநிரல் பதிப்பு) பிரித்தெடுக்க சாதனநிரலை இரு-கிளிக் செய்யவும்.

 : F-XXXX-V**W.exe

கோப்பு மற்றும் கோப்புறையின் வரிசைநிலை கீழே காட்டப்பட்டுள்ளது:

 : XXXXUpdate

 : firmware

 : firmware.bin

# 4 சாதனநிரலை மெமரி கார்டுக்கு நகலெடுத்தல்

கார்டு ரீடர் அல்லது கார்டு துளை பொருத்தப்பட்ட கணினியைப் பயன்படுத்தி கேமராவின் மெமரி கார்டுக்கு சாதனநிரலை நகலெடுக்கலாம்.

**1** வடிவமைக்கப்பட்ட ஒரு மெமரி கார்டை கார்டு ரீடர் அல்லது கார்டு துளையில் செருகவும். Nikon Transfer 2 போன்ற பயன்பாடு தானாக தொடங்கினால், தொடர்வதற்கு முன்பு பயன்பாட்டிலிருந்து வெளியேறவும்.

**Windows 10/Windows 8.1**

விளக்கப்படத்தில் காட்டியுள்ளபடி செய்தியை Windows காட்டுமானால், உரையாடலை மூடுவதற்கு × கிளிக் செய்யவும்.




**Windows 7/Windows Vista**

Windows 7/Windows Vista இல், AutoPlay உரையாடல் ஒன்று காண்பிக்கப்படலாம். [x] என்பதைக் கிளிக் செய்யவும்.




**2** "firmware" கோப்பை மெமரி கார்டுக்கு பிரதியெடுக்கவும்.




நகலெடுப்பது முடிந்த பிறகு, மெமரி கார்டில் உள்ள "firmware" கோப்புறையைத் திறந்து "firmware.bin" என்ற கோப்பை கொண்டுள்ளதா என்பதை உறுதி செய்யவும்.

**முக்கியம்**
மெமரி கார்டின் முதன்மை கோப்பகத்தில் “firmware” கோப்புறையை நகலெடுப்பதை உறுதிசெய்யவும். முதன்மை கோப்பகத்தின் கீழ் உள்ள ஒரு கோப்புறையில் புதிய சாதனநிரல் சேமிக்கப்பட்டிருந்தால் கேமரா அதை அடையாளம் காணாது.

3 மெமரி கார்டை உங்கள் கணினி அகற்றக்கூடிய வட்டாக காண்பித்தால், அந்த அகற்றக்கூடிய வட்டில் வைத்து வலது-கிளிக் செய்யும் போது தோன்றும் மெனுவில் **Eject** என்பதைத் தேர்வுசெய்யவும். கார்டு ரீடர் அல்லது கார்டு துளையிலிருந்து மெமரி கார்டை நீக்கவும்.

# 5 கேமரா சாதனநிரல் புதுப்பித்தல்

உங்கள் கேமராவில் காண்பிக்கப்படும் மெனுக்கள் இங்கே காண்பிக்கப்படுபவையிலிருந்து வேறுபடலாம்.
புதுப்பித்தலின் போது, இதை செய்யவேண்டாம்:
- மெமரி கார்டை அகற்றுதல்
- கேமராவை ஆஃப் செய்தல்
- AC அடாப்டரை பிளக்கிலிருந்து விடுவித்தல் அல்லது துண்டித்தல்
- பேட்டரியை நீக்குதல்
- கேமராவை சக்திவாய்ந்த மின்காந்த இரைச்சலில் வைத்தல்

மேற்கூறிய செயல்களில் ஏதேனும் ஒன்று கேமராவை இயங்கவிடாமல் செய்துவிடும்.

1 சாதனநிரலைக் கொண்டுள்ள மெமரி கார்டை கேமராவின் மெமரி கார்டு துளையில் செருகவும்.

2 கேமராவை ஆன் செய்யவும்.

3 மெனுக்களைக் காட்ட MENU ஐ அழுத்தவும்.

4 அமைப்பு மெனுவிலிருந்து **சாதனநிரல் பதிப்பு** என்பதைத் தேர்வுசெய்யவும்.



5 ஒரு சாதனநிரல் புதுப்பி உரையாடல் காட்டப்படும். புதுப்பித்தலை தொடங்க **ஆம்** என்பதை தேர்வுசெய்யவும்.




புதுப்பித்தல் செயல்முறையில் இருக்கும் போது வலது புறத்தில் காண்பிக்கப்படுவது போன்ற செய்தி காண்பிக்கப்படும்.




புதுப்பித்தல் முடிந்த பிறகு வலது புறத்தில் காண்பிக்கப்படுவது போன்ற செய்தி காண்பிக்கப்படும்.



## 6 புதுப்பிதல் வெற்றிகரமாக முடிந்தது என்பதை உறுதிசெய்யவும்.

6-1. கேமராவை ஆஃப் செய்து மெமரி கார்டை நீக்கவும்.

6-2. “கேமராவின் தற்போதைய சாதனநிரல் பதிப்பைச் சோதித்தல்”, என்று செயல்முறை 2 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி சாதனநிரல் பதிப்பு உள்ளதா என்பதைச் சோதிக்கவும்.

6-3. புதுப்பித்தல் பதிப்பு காண்பிக்கப்பட்டால், புதுப்பித்தல் வெற்றிகரமாக முடிந்தது.




“XXXX” என்பது கேமராவின் பெயர் மற்றும் “**” என்பது சாதனநிரல் பதிப்பு.

புதுப்பித்தல் வெற்றிபெறவில்லை என்றால், Nikon சேவை பிரதிநிதியை அணுகவும்.

## 7 கேமராவில் மெமரி கார்டை வடிவமைக்கவும்.

சாதனநிரல் புதுப்பித்தலை இது முடிக்கிறது.